# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## அனைத்துலகத் தேர்வு

## 2020

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

சுட்டெண்: ____________________

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100



TEDC

# அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **1** | **30** | | | |
| **2** | **10** | | | |
| **3** | **10** | | | |
| **4** | **10** | | | |
| **5** | **15** | | | |
| **6** | **05** | | | |
| **7** | **20** | | | |
| மொத்தப் புள்ளிகள் | **100** | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை

அ ) 247 ☐ ஆ ) 216 ☐
இ ) 217 ☐ ஈ ) 30 ☐

2. மேழி என்பது

அ ) நெல் ☐ ஆ ) வயல் ☐
இ ) ஏர் ☐ ஈ ) மாடு ☐

3. கணைக்கால் இரும்பொறையுடன் போர் புரிந்த மன்னன்

அ ) செங்கணான் ☐ ஆ ) செங்குட்டுவன் ☐
இ ) சேரலாதன் ☐ ஈ ) கரிகாலன் ☐

4. தலைவர்கள் என்பது

அ ) ஆண்பால் ☐ ஆ ) பலவின்பால் ☐
இ ) ஒன்றன்பால் ☐ ஈ ) பலர்பால் ☐

5. **பழமொழி:**

நீர் அடித்து ______________ விலகாது.

அ ) மோர் ☐ ஆ ) நீர் ☐
இ ) போர் ☐ ஈ ) நார் ☐

6. எல்லாளன் ஆட்சியின்போது தலைநகரமாக இருந்த இடம்

அ ) பொலநறுவை ☐ ஆ ) அநுராதபுரம் ☐
இ ) நல்லூர் ☐ ஈ ) திருகோணமலை ☐

7. நீ + ஐ என்பதைச் சேர்த்து எழுதினால்

அ ) நீயை ☐ ஆ ) உன்னை ☐

இ ) நீங்களை ☐ ஈ ) உங்களை ☐

8. குளத்தில் ஆமையுடன் வாழ்ந்த பறவைகள்

அ ) கிளிகள் ☐ ஆ ) கொக்குகள் ☐

இ ) கோழிகள் ☐ ஈ ) புறாக்கள் ☐

9. மன்னார்க்கடலில் முத்துக்குளிக்கும் முழு உரிமையையும் பெற்றிருந்த அரசு

அ ) யாழ்ப்பாண அரசு ☐ ஆ ) கண்டி அரசு ☐

இ ) கோட்டை அரசு ☐ ஈ ) சிங்கள அரசு ☐

10. செயப்படுபொருள் எப்பொழுதும் ________ ஆகவே இருக்கும்.

அ ) வினைச்சொல் ☐ ஆ ) பெயர்ச்சொல் ☐

இ ) வினாச்சொல் ☐ ஈ ) பொதுச்சொல் ☐

11. வேளாண்மை என்பது

அ ) உப்புவிளைவித்தல் ☐ ஆ ) உழவுத்தொழில் ☐

இ ) மீன்பிடித்தொழில் ☐ ஈ ) தேன்சேகரித்தல் ☐

12. போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி வைத்த நூற்றாண்டு

அ ) 14 ஆம் ☐ ஆ ) 15 ஆம் ☐

இ ) 16 ஆம் ☐ ஈ ) 17 ஆம் ☐



TEDC

13. தண்ணீர் என்பதைப் பிரித்து எழுதினால்

அ ) தண்மை + நீர் ☐ ஆ ) தண் + நீர் ☐

இ ) தண்ணீ + நீர் ☐ ஈ ) தண் + ணீர் ☐

14. 'பட்டி பெருக வேணும் தம்பிரானே' எனத் தொடங்கும் பாடல்

அ ) மீனவர்பாடல் ☐ ஆ ) காதற்பாடல் ☐

இ ) தாலாட்டுப்பாடல் ☐ ஈ ) ஏர்ப்பாடல் ☐

15. கந்தரோடையின் முன்னைய பெயர்

அ ) கதிரமலை ☐ ஆ ) பூநகரி ☐

இ ) பொன்பரிப்பு ☐ ஈ ) நல்லூர் ☐

16. ஒரே பொருள் தரும் இரு சொற்கள்

அ ) வானம், வள்ளல் ☐ ஆ ) ஞாயிறு, கதிரவன் ☐

இ ) உவகை, விண் ☐ ஈ ) மகிழ்ச்சி, வறுமை ☐

17. போரில் ஏற்பட்ட காயம்

அ ) உடற்புண் ☐ ஆ ) விழுப்புண் ☐

இ ) கைப்புண் ☐ ஈ ) மனப்புண் ☐

18. காலப்பெயர்

அ ) காது ☐ ஆ ) நாளை ☐

இ ) நூல் ☐ ஈ ) வட்டம் ☐

19. எழுதினான் என்பதன் இடைநிலை

அ ) ன் ☐ ஆ ) னான் ☐
இ ) ஆன் ☐ ஈ ) இன் ☐

20. **குறள்:**

பெரியாரைப் ________ தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும்

அ ) காணா ☐ ஆ ) வீணா ☐
இ ) பேணா ☐ ஈ ) நாணா ☐

21. 1619 இல் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றியவர்கள்

அ ) போர்த்துக்கேயர் ☐ ஆ ) ஆங்கிலேயர் ☐
இ ) ஒல்லாந்தர் ☐ ஈ ) சிங்களவர் ☐

22. ஒருமை,பன்மை என்பன

அ ) இடம் ☐ ஆ ) பால் ☐
இ ) எண் ☐ ஈ ) திணை ☐

23. குமண மன்னன் ஆண்ட மலைப்பகுதி

அ ) பறம்புமலை ☐ ஆ ) முதிரைமலை ☐
இ ) இமயமலை ☐ ஈ ) பொதிகைமலை ☐

24. தன்மைப் பன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) நீங்கள் ☐ ஆ ) அவர்கள் ☐
இ ) உங்கள் ☐ ஈ ) நாங்கள் ☐

25. தேசிகவிநாயகம்பிள்ளையினால் ஆங்கில நூலைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட நூல்

அ ) திருக்குறள் ☐ ஆ ) நாலடியார் ☐

இ ) ஆசியசோதி ☐ ஈ ) தேம்பாவணி ☐

26. ஈழம் என்பதன் பொருள்

அ ) தங்கம் ☐ ஆ ) இரும்பு ☐

இ ) வெள்ளி ☐ ஈ ) செம்பு ☐

27. ஒரு சொல்லியத்தின் கருத்தை முடித்து நிற்கும் சொல்

அ ) எழுவாய் ☐ ஆ ) பயனிலை ☐

இ ) செயப்படுபொருள் ☐ ஈ ) பெயர்ச்சொல் ☐

28. தாயகத்தில்இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம்

அ ) திருகோணமலை ☐ ஆ ) கொழும்பு ☐

இ ) மட்டக்களப்பு ☐ ஈ ) யாழ்ப்பாணம் ☐

29. யாழ்ப்பாணத் தமிழ் அரசின் கொடி

அ) வீணைக்கொடி ☐ ஆ ) நந்திக்கொடி ☐

இ ) புலிக்கொடி ☐ ஈ ) சிங்கக்கொடி ☐

30. தேடுவாள் என்பதன் வினையடி

அ ) ஆள் ☐ ஆ ) வ் ☐

இ ) தேடு ☐ ஈ ) இன் ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

கல்வி கற்பதற்கு ஏற்ற காலம் இளமைக்காலமாகும். கல்வி கற்றவர்களை உலகம் மதிக்கிறது. ‘‘இளமையிற் கல்வி சிலையில் எழுத்து’’ என்பதற்கு அமைய நல்ல கல்வியையும் நற்பழக்கங்களையும் இளமையிலேயே மாணவருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். இளமையில் பழகிய நற்பழக்கங்கள் எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கும். எமது தாயகத்தில் மாணவர்கள் கல்வி கற்பதற்கு அடிப்படை வசதி இன்றி துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் துயர் துடைக்க வேண்டும்; நமது இனம் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும். ஆகையால், தாயகத்தில் வாழும் சிறார்களின் கல்விக்கு நாம் உதவுவோம். நாமும் கல்வியில் சிறந்து விளங்குவோம்.

1. யாரை உலகம் மதிக்கிறது?

___

2. எவற்றை மாணவருக்கு இளமையில் கற்றுக்கொடுக்க வேண்டும்?

___

___

3. கல்வி கற்பதற்கு ஏற்ற காலம் எது?

___

4. நமது இனம் எதில் சிறந்து விளங்க வேண்டும்?

___

5. எங்கு வாழும் சிறார்களின் கல்விக்கு நாம் உதவ வேண்டும்?

___

புள்ளிகள் 10



TEDC

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. உள்ளத்தினின்றும் வெளிப்படும் இயல்புகளை எவ்வாறு அழைப்பர்?

___

2. தமிழ்மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் எவை?

___

___

3. குழந்தையை உறங்க வைப்பதற்காகப் பாடும் பாடல் எது?

___

4. ஏர்ப்பாட்டு யாரால் பாடப்படுகிறது?

___

5. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வன்னியை ஆண்டவன் யார்?

___

6. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை எங்கே பிறந்தார்?

___

7. 1815 இல் இலங்கைத்தீவு முழுவதையும் கைப்பற்றியவர் யார்?

___

புள்ளிகள் 10



TEDC

4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி; கவிதையை முழுமையாக்குக.

## பிறருக்கு உதவுவோம்

| | | | | |
|---|---|---|---|---|
| மனத்தில் | நாங்களும் | பெருமை | பிறருக்கு | உதவிடுவோம் |

மலர்கள் போல நாங்களும்
______________ மென்மை கொள்ளுவோம்
மரங்கள் போல நாங்களும்
______________ உதவுவோம்!

நீரைப் போல நாங்களும்
உயிர்களுக்கு ______________
மழையைப் போல ______________
மக்களுக்கு உதவுவோம்!

பிறருக்கென்றும் உதவுதல்
______________ என்று எண்ணுவோம்
பிறருக்கு என்றும் உதவிடச்
சிறுவர் நாமும் பழகுவோம்

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

அ ) தொழிற்பெயர் ______________________

ஆ ) எதிர்காலம் ______________________

இ ) வினைமுற்று ______________________

2. 1. உயிர் எழுத்துகள் எத்தனை? ______________

2. அவற்றின் வகைகளைத் தருக.

______________________________________

______________________________________

3. பின்வரும் சொல்லியத்தின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருளை எழுதுக .

கிளி பழத்தைக் கொத்தியது.

எழுவாய் ______________________

பயனிலை ______________________

செயப்படுபொருள் ______________________

4. தரப்பட்டுள்ள சொற்களின் திணை, இடம் என்பவற்றைத் தருக.

| | திணை | இடம் |
|---|---|---|
| தாவியது | __________ | __________ |
| உண்கிறாய் | __________ | __________ |
| அவர்கள் | __________ | __________ |

5. 'ஓடு' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு சொல்லியங்கள் எழுதுக.

பெயர் ______________________

வினை ______________________

புள்ளிகள் 15

6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. ஆண்டு விழாவில் வேணி ______________ மீட்டினாள்.
( வீணை , வீனை )

2. விளையாட்டுத் திடலில் வீரர்கள் ______________ வகுத்து நின்றனர்.
( அணி, அனி )

3. இன்று எனக்கு ______________ விடுமுறை.
( பள்ளி, பல்லி )

4. ______________ பசுமையாகக் காட்சியளித்தன.
( மறங்கள், மரங்கள் )

5. தமிழர் ______________ சிறந்து விளங்கினர்.
( கலைகளில், களைகளில் )

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 80 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- மாமல்லன் எல்லாளன்
- நாட்டார்பாடல்கள்
- எமது பெற்றோர்கள்
  - உமது பெற்றோர் பற்றிய அறிமுகம்
  - பெற்றோர் உம்மிடம் காட்டும் அக்கறை
  - பெற்றோருக்கு நீர் செய்யும் உதவிகள்
  - எதிர்காலத்தில் நீர் அவர்களுக்குச் செய்ய வேண்டியவை

புள்ளிகள் 20